# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

*காலேப் யோசுவா*
*4/130, காந்தி தெரு, சென்னீர்குப்பம்,*
☎: 044 – 26490183 Cell : 9444701953
*பூந்தமல்லி, சென்னை* – 600 056

## கர்ப்பம் விழுதல், மலடு மற்றும் கருச்சிதைவு, கர்ப்பத்தடை

1. கர்ப்பம் விழுகிறதும், மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை. யாத்.23:26. உன் தேசத்தில் இருப்பதில்லை. அப்படியானால் இதர தேசங்களில் இருக்கும் என்றே பொருள்படும். உன் தேசம் என்பது இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில். பழைய ஏற்பாடு காலத்தில் கர்ப்பம் விழுதலும் மலடும் இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் இருந்ததில்லை. புதிய ஏற்பாடு காலத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசித்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுவதன் மூலம் அவரோடு கூட மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தவர்கள் மத்தியில் கர்ப்பம் விழுவதும், மலடும் இருப்பதில்லை. ஆமென்! அல்லேலூயா!

2. சகல ஜனங்களைப் பார்க்கிலும் நீ ஆசிர்வதிக்கப்பட்டிருப்பாய்: உங்களுக்குள்ளும், உங்கள் மிருகஜீவன்களுக்குள்ளும் ஆணிலாகிலும், பெண்ணிலாகிலும் மலடு இருப்பதில்லை. உபா.7:14. அன்று இஸ்ரவேல் ஜனங்கள் இதர ஜனங்களைப் பார்க்கிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தார்கள். இன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தரித்துக் கொண்டவர்கள் அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியை முத்திரையாக பெற்ற ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களில் ஆணிலாகிலும், பெண்ணிலாகிலும் மலடு இருப்பதில்லை. மீண்டுமாக ஒரு ஆமென்! அல்லேலூயா!

3. கர்ப்பம் விழுதல் மற்றும் மலடு : தேவனுடைய ஏதேனில் காணப்படாது. கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையில் காணப்படாது.

4. நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். ஆதி.1:28. நாம் பூமியில் பலுகிப் பெருகவே தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். தேவனுடைய நியமம் இப்படியிருக்க நாம் பலுகிப் பெருகுவதை தடைசெய்வோமானால், கர்ப்பத்தடை செய்வோமானால் அது தேவனுடைய அநாதி தீர்மானத்திற்கு, அவருடைய நியமத்திற்கு, சித்தத்திற்கு, பிரமானத்திற்கு மாறானது.

5. கருச்சிதைவு மற்றும் கர்ப்பத்தடை: சாத்தானுடைய ஏதேனில் காணப்படும். அதாவது அவிசுவாசி மற்றும் பாவனை விசுவாசிகளின் மத்தியில் காணப்படும்.

---

1. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்காக கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா: தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற கிறிஸ்துவின் சபைக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். ஆணும், பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். (ஆதி.1:26-28). நாம் பலுகிப் பெருகி பூமியை நிரப்பவே தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டோம். இது மனுக்குலத்தின் மீது தேவனுடைய ஆசீர்வாதம். எப்பொழுதுமே தேவனுடைய ஆசீர்வாதத்தை சீர்குலைப்பது சாத்தானுடைய வேலை. சத்தியத்தை தாறுமாறாக்குவது பிசாசின் வேலை. தேவனுடைய மக்கள், தேவனுடைய ஆசீர்வாதத்தை இழந்து மனநிம்மதியற்றவர்களாக திரிவதை சாத்தான் எப்பொழுதும் விரும்புகிறான். ஆதலால் அதற்காக அவன் எந்தெந்த வகையில், வழிகளில் மனுமக்களை ஏமாற்ற முடியுமோ, அத்தனை வகைவழிகளையும் கையாளுவான். அவனுடைய வலையில் விழுபவர்கள் அநேகர். ஏனென்றால் அழைக்கப்பட்டவர்கள் அநேகர். தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களோ சிலர்.

3. நாம் பலுகிப் பெருகுவதே தேவனுக்கு விருப்பம். அது அவருடைய சித்தமும் கூட. உதாரணமாக :
அ. தேவன் நோவாவையும் அவன் குமாரரையும் ஆசீர்வதித்து: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள். நீங்கள் பலுகிப் பெருகி, பூமியிலே திரளாய் வர்த்தித்து விருத்தியாகுங்கள் என்றார். (ஆதி. 9:1,7)
ஆ. கர்த்தருடைய துதனாவர் இரண்டாம் தரம் வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு: நான் உன்னை ஆசீர்வதிக்கவே, ஆசீர்வதித்து: உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். (ஆதி. 22:15-18).
இ. அப்பொழுது தேவன்: இஸ்மவேலுக்காகவும் நீ (ஆபிரகாம்) செய்த விண்ணப்பத்தைக் கேட்டேன்: நான் அவனை ஆசீர்வதித்து மிகவும் அதிகமாகப் பலுகவும், பெருகவும் பண்ணுவேன் என்றார். (ஆதி 17:20)
ஈ. அன்று ராத்திரியிலே கர்த்தர் அவனுக்கு (ஈசாக்கு) தரிசனமாகி : நான் என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமின் நிமித்தம் உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியை பெருகப்பண்ணுவேன் என்றார். (ஆதி.26:24)

உ. தேவன் யாக்கோபை நோக்கி : நான் சர்வ வல்லமையுள்ள தேவன். நீ பலுகிப் பெருகுவாயாக: ஒரு ஜாதியும், பற்பல ஜாதிகளின் கூட்டங்களும் உன்னிடமிருந்து உண்டாகும். ராஜாக்களும் உன் சந்ததியில் பிறப்பார்கள் என்றார். (ஆதி. 35:11).
ஊ. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேல் வம்சத்தினரை மந்தை பெருகிறது போல் அவர்களில் மனிதரைப் பெருகப்பண்ணுவேன் என்று சொல் என்றார். (எசே. 36:37). நான் உங்கள் மேல் நோக்கமாய் இருந்து உங்களை பலுகவும், பெருகவும் பண்ணுவேன். (லேவி.26:9). உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைப் பெருகப்பண்ணினார். இதோ இந்நாளில் வானத்து நட்சத்திரங்களைப் போல திரளாய் இருக்கிறீர்கள். நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரம் மடங்கு அதிகமாய் இருக்கும்படி உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் சொல்லியபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக. (உபா. 1:10,11).

4. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை பெருகப்பண்ணுவதில் இரம்மியமாய் இருந்தார். கர்த்தர் உங்களுக்கு நன்மை செய்யவும், உங்களைப் பெருகப்பண்ணவும் உங்கள் மேல் இரம்மியமாய் இருந்தார். (உபா.28:63) பாருங்கள் நாம் பலுகிப் பெருகுவதிலே தேவன் இரம்மியமாய் இருக்கிறார்.

5. இந்த ஜாதியை (இஸ்ரவேல் ஜனங்களை) பெருகப்பண்ணினீர்: கர்த்தாவே இந்த ஜாதியை பெருகப்பண்ணினீர்: நீர் மகிமைப்பட்டீர். (ஏசா 26:15) பாருங்கள் இஸ்ரவேல் ஜனங்கள் பலுகிப் பெருகுவதில் தேவன் மகிமைப்பட்டார். ஆம், நாம் ஆபிரகாமின் சந்ததி. ஆகையால் நாம் பலுகிப் பெருகுவதில் தேவன் மகிமைப்படுகிறார். பிரசவிக்கப்பண்ணுகிறவராகிய நான் பிரசவிப்பதை தடுப்பேனோ என்கிறார். (ஏசா. 66:9) அவர் பிரசவத்தை தடுக்கிற தேவன் அல்ல. ஆனால் நாமோ நம்முடைய வழிகளைத் தெரிந்துக் கொண்டு, பிரசவத்தைத் தடுப்பதற்குரிய உபாய தந்திரங்களைத் தெரிந்துக் கொண்டு தேவனுடைய நியமங்களை தாறுமாறாக்குகிறோம்.

6. நாம் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாய் இருந்த பரிசுத்த ஸ்திரீகளின் கர்ப்பங்கள் அடைக்கப்பட்டு, பின்பு அவைகள் திறக்கப்பட்டதையும் காண்கிறோம்.
அ. ஆபிராமின் மனைவியாகிய சாராய்க்கு பிள்ளை இல்லை. அவள் மலடியாய் இருந்தாள். (ஆதி. 11:30) இது பரிசுத்த வேதாகமத்தில் காணப்படும் முதல் மலட்டுத்தன்மை. ஆபிராம்: கர்த்தராகிய ஆண்டவரே நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே: தேவரீர் எனக்கு புத்திர சந்தானம் அருளவில்லை என்றான். (ஆதி.15:2,3) கர்த்தர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்து பார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால் அவைகளை எண்ணு என்று சொல்லி : உன் சந்ததி இவ்வண்ணமாகவே இருக்கும் என்றார். அவன் கர்த்தரை விசுவாசித்தான். அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார். (ஆதி.15:5,6). ஆபிரகாம் முதிர் வயதாய் இருக்கையில் சாராள் கர்ப்பவதியாகி, தேவன் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். ஆபிரகாம், சாராள் தனக்கு பெற்ற குமாரனுக்கு ஈசாக்கு என்று பெயரிட்டான். (ஆதி. 21:2,3) ஆம், மலடியாக இருந்த சாராய், சாராளாக பெயர் மாற்றப்பட்டு, ஆபிரகாமுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்.

7. ஈசாக்கு ரெபெக்காளை விவாகம் பண்ணினான். அவளும் மலடியாக இருந்தாள்.(ஆதி.25:21) இது வேதவாக்கியங்களில் காணப்படும் இரண்டாம் மலட்டுத்தன்மை. ஈசாக்கு மலடியாய் இருந்த தன் மனைவிக்காக கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான். கர்த்தர் அவன் வேண்டுதலைக் கேட்டு அருளினார். அவன் மனைவி ரெபெக்காள் கர்ப்பம் தரித்தாள் பிரசவகாலம் பூரமாணபோது, அவள் கர்ப்பத்தில் இரண்டைப் பிள்ளைகள் இருந்தது. (ஆதி. 25:20-24).

8. யாக்கோபின் மனைவியாகிய ராகேலும் மலடியாய் இருந்தாள். (ஆதி.29:31) வேதவாக்கியங்களில் காணப்படும் மூன்றாவது மலட்டுத்தன்மை இது. அவள் யாக்கோபுவிடம் எனக்குப் பிள்ளைக் கொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன் என்றாள். யாக்கோபு, தேவன் அல்லவோ உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார் என்றான். ஆனால் தேவன் ராகேலை நினைத்தருளினார். அவளுக்கு தேவன் செவிக்கொடுத்து, அவள் கர்ப்பம் தரிக்கும்படி செய்தார். அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று, தேவன் என் நிந்தையை நீக்கிவிட்டார் என்றாள். (ஆதி.30:22-24)

9. மனோவாவின் மனைவி பிள்ளைபெறாத மலடியாய் இருந்தாள். இது நான்காவது மலட்டுத் தன்மை (நியாயாதி. 13:2) கர்த்தருடைய துதனானவர் அந்த ஸ்திரீக்கு தரிசனமாகி அவளை நோக்கி: இதோ, பிள்ளைப் பெறாத மலடியே நீ கர்ப்பம் தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய் என்றார். பின்பு அந்த ஸ்திரீ ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்கு சிம்சோன் என்று பெயரிட்டாள். அந்தப் பிள்ளை வளர்ந்தது. கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார். (நியாயாதி. 13:3,24).

10. சாமுவேலின் தாயாகிய அன்னாளும் பிள்ளை இல்லாதிருந்தாள். இது வேதத்தில் காணப்படும் ஐந்தாவது மலட்டுத்தன்மை (1சாமு. 1:2) கர்த்தர் அவள் கர்ப்பத்தை அடைத்திருந்தார். எல்கானாவுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள். ஒருத்திப் பெயர் அன்னாள். மற்றவள் பெயர் பெனின்னாள். பெனின்னாளுக்குப் பிள்ளைகள் இருந்தார்கள். அன்னாளுக்கோ பிள்ளைகள் இல்லை. கர்த்தர் அவள் கர்ப்பத்தை அடைத்திருந்தார். அன்னாள் கர்த்தருடைய ஆலயத்திற்குச் சென்று மனங்கசந்து மிகவும் அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினாள். அன்னாள் தன் இருதயத்திலே வேண்டினாள். அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைந்தது. அவள் சத்தமோ கேட்கப்படவில்லை. கர்த்தருடைய சந்நிதியில் தன் இருதயத்தை ஊற்றினாள். கர்த்தர் அவளை நினைத்தருளினார். அன்னாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று, கர்த்தரிடத்தில் அவனைக் கேட்டேன் என்று சொல்லி அவனுக்கு சாமுவேல் என்று பெயரிட்டாள். (1சாமு. 1:1,2,5,9,10,13,19,20).

11. கிறிஸ்துவுக்குள் எனக்குப் பிரியமானவர்களே, பாருங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்று கூறி மனுமக்களை ஆசீர்வதித்த தேவன், மலடிகளை சந்தோஷமான பிள்ளைத்தாய்ச்சியாக்கி, வீட்டிலே குடியிருக்கப்பண்ணினார். அல்லேலூயா! (சங். 113:9) தேவன் மோசேயை நோக்கி : ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்கு சொல் இதுவே என்றென்றைக்கும் என் நாமம், தலைமுறை, தலைமுறை தோறும் இதுவே என் பேர்ப்பிரஸ்தாபம் என்று கூறிய தேவன் (யாத். 3:15) ஆபிரகாமின் மனைவியாகிய சாராயின் கர்ப்பத்தையும், ஈசாக்கின் மனைவியாகிய ரெபெக்காளின் கர்ப்பத்தையும், யாக்கோபின் மனைவியாகிய ராகேலின் கர்ப்பத்தையும் அடைத்து, பின் திறந்தார். தேவனுடைய காரியங்கள் நமது அறிவுக்கு எட்டாவதவைகளாகவே இருக்கிறது.

12. ஆனாலும் சில சமயங்களில் தேவன் ஒரு காரணத்தோடு கர்ப்பத்தை அடைத்ததும் உண்டு. ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளை தன் சகோதரி என்று சொன்னதினாலே கேராரின் ராஜாவாகிய அபிமெலேக்கு ஆள் அனுப்பி சாராளை அழைப்பித்தான். தேவன் இராவிலே அபிமெலேக்குக்கு சொப்பனத்திலே தோன்றி: நீ அழைப்பித்த ஸ்திரீயின் நிமித்தம் நீ செத்தாய்: அவள் ஒருவனுடைய மனைவியாய் இருக்கிறாளே என்றார். அபிமெலேக்கு சாராளைச் சேராதிருந்தான். அபிமெலேக்கு உத்தம இருதயத்தோடும் சுத்தமான கைகளோடும் இதைச் செய்தான். கர்த்தரும் அதை அறிவார். அபிமெலேக்கு தேவனுக்கு விரோதமாக பாவம் செய்யாதாபடிக்கு அவனைத் தடுத்தார். ஆதலால் சாராளைத் தொட அவனுக்கு அவர் இடம் கொடுக்கவில்லை. (ஆதி. 20:1-6). ஒரு தீர்க்கதரிசியின் மனைவியை தேவன் காத்துக் கொண்டார். அதே நேரத்தில் தேவனுக்கு பயந்த மனுஷனும் பாவம் செய்யாதபடிக்கு கர்த்தர் காத்துக் கொண்டார்.

13. தேவன் தன்னுடைய ஊழியக்காரனுடைய மனைவியைப் பாதுகாக்கிறார். ஏனென்றால் அவள், அவன் சரீரத்தின் பாகமாக இருக்கிறாள். அடுத்து தேவன் தம்மிடத்தில் உண்மையும் உத்தமுமானவன் பாவம் செய்யதாபடிக்கு காத்துக் கொள்கிறார். ஆதலால் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட ஒரு உண்மையும் உத்தமுமான ஊழியக்காரன். இப்படிப்பட்ட பாவங்களைச் செய்து வாழ முடியாது. தேவன் அவனைக் காத்துக் கொள்கிறார். ஒருவன் தன்னை ஊழியக்காரன் என்று அழைத்துக் கொண்டு இப்படிப்பட்ட பாவங்களை செய்து வருவானாயின் அவன் தேவனால் ஏற்படுத்தப்பட்ட பாத்திரம் அல்ல. மாறாக அவன் தேவனுக்கென்று தன் சுயசித்தத்தின்படி ஊழியம் செய்கிறவனாக இருக்கிறான். ஆதலால் பெண்களுக்களுக்கடுத்த பாவங்களில் அடிக்கடி சிக்கி, தன்னை மேன்மை பாராட்டிக் கொண்டு திரியும் சாத்தானை அடையாளம் கண்டு அவனை புறம்பே தள்ளுங்கள். அவன் ஆட்டுத்தோலைப் போர்த்திய ஓநாய். அவன் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்தவன். நான் யாரைக்குறித்து எழுதுகிறேன் என்று உங்களுக்குப் புரிகிறதா? நான் அவனை உங்களுக்கு அடையாளம் கட்டிவிட்டேன். என் பணி முடிந்தது.

14. எங்கு சென்றாலும் இப்படிப்பட்ட பாவத்தில் விழும் அந்த நபரை நம்மில் சிலர் ஊழியக்காரனாக கருதி உபசரித்து, துன்மார்க்கனுக்கு துணைப்போகிறதுதென்ன? அக்கிரமக்காரனுடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு, அறிந்த சத்தியத்திலிருந்து, அதன் மேல் கொண்டுள்ள உறுதியிலிருந்து விலகி விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள்.

15. பாருங்கள், ஆபிரகாமுடைய மனைவியாகிய சாராள் நிமித்தம் கர்த்தர் அபிமெலேக்கு வீட்டார் கர்ப்பத்தையெல்லாம் அடைத்தார் . ஆபிரகாம் தேவனை நோக்கி வேண்டிக்கொண்டான். அப்பொழுது தேவன் அபிமெலேக்கையும் அவன் மனைவியையும் அவன் வேலைக்காரிகளையும் குணமாக்கினார். பிள்ளைபெற அநுகிரகம் பண்ணினார். (ஆதி 20 அதி) தேவன் முகாந்தரம் இல்லாது ஒரு ஸ்திரீயின் கர்ப்பத்தை அடைப்பது இல்லை. முகாந்தரத்தை அறிந்து கர்த்தரின் இரக்கத்திற்காக முறையிடும்போது அவர் நிச்சயமாக இரக்கம் பாராட்டுகிற தேவனாய் இருக்கிறார். அவர் இரக்கம் உள்ளவர். நெருக்கத்தில் விசாலம் உண்டாக்குகிற தேவன். ஆதலால் அவரை அண்டிக்கொண்டிருக்கி[illegible] யாவரும் பாக்கியவான்கள்.

16. தாவீதுக்கு தேவன் மேல் உள்ள ஆர்வத்தைப் பாருங்கள். இஸ்ரவேலுடைய சேனைகளை நிந்தித்த கோ[illegible]யாத்தைக் குறித்து: ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் [illegible]மாத்திரம். நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்: நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன் என்றான். இவ்வாறாக கர்த்தருடைய நாமத்தைக் குறித்து வைராக்கியம் பாராட்டிய தாவீது கர்த்தருடைய பெட்டியை கித்தியனாகிய ஓபேத் ஏதோமின் வீட்டிலிருந்து கொண்டுவரும்போது சணல் நூல் ஏபோத்தை தரித்துக்கொண்டு (ஆசாரியன் உடை) தன் முழு பலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணினான். தாவீது ராஜா கர்த்தருக்கு முன்பாக குதித்து, நடனம் பண்ணினான், தன்னை இஸ்ரவேலாகிய கர்த்தருடைய ஜனத்தின் மேல் தலைவனாகக் கட்டளையிடும்படிக்குத் தெரிந்துக் கொண்ட கர்த்தருடைய சமூகத்திற்கு முன்பாக ஆடிப் பாடினான். இதைப் பார்த்த சவுலின் குமாரத்தியும், தாவீதின் மனைவியுமாகிய மீகாள் தன் இருதயத்திலே அவனை அவமதித்தாள், நிந்தித்தாள். இதினால் மீகாளுக்கு மரணமடையும் நாள் மட்டும் பிள்ளை இல்லாதிருந்தது. இதை நீங்கள் 2சாமு 6வது அதியில் வாசிக்கலாம். தாவீது ராஜாவாக மாத்திரமல்ல, ஆசாரியனாகவும் இருந்து சேனைகளின் கர்த்தருடைய நாமத்தினாலே ஜனங்களை ஆசீர்வதித்தான். மீகாள் அவனை நிந்தித்தது தேவனுடைய பார்வையில் குற்றமாக காணப்பட்டது. ஆதலால் அவளுடைய கர்ப்பத்தை தேவன் அடைத்தார். ஆம், தேவ மனிதர்களை, ஊழியக்காரர்களை நிந்திப்பதினால் கர்ப்பம் அடைக்கப்பட்டது. இது நம் ஜனங்களுக்கு ஒரு திருஷ்டாந்தகமாக எழுதிவைக்கப்பட்டுள்ளது.

17. கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே, பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளில் மலடிகளாய் இருந்தவர்கள் கர்ப்பம் தரித்து பிள்ளைகளைப் பெற்றார்கள். இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன் (சங் 127:4), உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனி தரும் திராட்சைச் செடியைப் போல் இருப்பாள். உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவ மரக்கன்றுகளைப் போல் இருப்பார்கள். இதோ கர்த்தருக்கு பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான். (சங் 128:3.4 ) கிறிஸ்துவுக்குள் எனக்கு அருமையானவர்களே பாருங்கள் பிள்ளைகளின் சுதந்தரம் கர்த்தருக்கு பயப்படுகிறவனுடைய ஆசீர்வாதம். அப்படியானால் பிள்ளைகள் சுதந்தரம் ஒருவனுக்கு இல்லை என்றால் கர்த்தருக்கு பயப்படுகிற பயம் அவன் உள்ளத்தில் இல்லை என்பதே பொருள்.

18. மேலும் வேதவாக்கியங்கள் கீழ்க்கண்டவாறு கூறுகிறது: கர்ப்பம் விழுதலும், மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை. (யாத் 23:26) பிரியமானவர்களே நாம் பலுகிப் பெருகவே தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டு இருப்பதால் நம் மத்தியில் கர்ப்பம் விழுவதும், மலடும் இருக்காது. ஒருக்காலும் இருக்காது. ஏனென்றால் கர்த்தர் நம்மை நாம் நம்முடைய தாயின் வயிற்றில் உருவாகும் முன்னே அறிந்திருக்கிறார். நாம் நமது தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிப்படும் முன்னே நம்மை அவர் அறிந்திருக்கிறார். (எரே 1:5) தேவன் ஒருவனை கிறிஸ்துவுக்குள் உலகத் தோற்றத்துக்கு முன்னே அறிந்திருக்கும் போது, தேவன் ஒருவனை தன் தாயின் கர்ப்பத்தில் உருவாகும் முன்னே அறிந்திருக்கும் போது, அவனை அவர் தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிப்படும் முன்னே அறிந்திருக்கும் போது, அவன் தாயின் வயிற்றிலிருந்து கர்ப்பம் விழுதலும் அவள் மலடுமாக எப்படி இருக்க முடியும்? இருக்கவே முடியாது.

19. சகல ஜனங்களைப் பார்க்கிலும் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய். உங்களுக்குள் ஆணாகிலும், பெண்ணாகிலும் மலடு இருப்பதில்லை. (உபா.7:14) சந்தானமற்றவன் தன் நாட்களில் வாழ்வடையாதவன். (எரே 22:30) பாருங்கள் தேவனுடைய மக்கள் மத்தியில் ஆண்களில், பெண்களில் மலடு இருப்பதில்லை. மேலும் பிள்ளைகள் இல்லாதவன் தன் நாட்களில் வாழ்வடையாதவன் என்று வேதம் கூறுகிறது. அப்படியானால் தன் நாட்களில் வாழ்வடையாதவன் அதாவது பிள்ளை சந்தானம் அற்றவன் தேவனுடைய ஊழியத்தை எப்படி செய்ய முடியும் ? ஒரு காலும் அப்படிப்பட்டவர்களை அவர் அழைப்பதில்லை. அவர் தம்முடைய வார்த்தையை காத்துக் கொள்கிறவர். ஆதலால் சந்தானம் இல்லாதவர்கள் கர்த்தரால் ஊழியத்திற்கு ஏற்படுத்தபட்டவர்கள் அல்ல. அவர்கள் தேவசித்தத்துக்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறார்கள்.

20. சந்தானம் அற்றவன் யார் என்றும் வேதவாக்கியங்கள் கூறுகின்றன. ஒருவன் தன் சகோதரன் மனைவியை விவாகம் பண்ணினால் அது அசுத்தம். தன் சகோதரனை நிர்வாணம் ஆக்கினான். அவர்கள் சந்தானமற்றிருப்பார்கள். (லேவி. 20:21) ஒருவன் தன் தகப்பனின் சகோதரனுடைய மனைவியோடே சயனித்தால். அவன் தன் தகப்பனின் சகோதரனை நிர்வாணம் ஆக்கினான். அவர்கள் தங்கள் பாவத்தை சுமப்பார்கள். சந்தானம் இல்லாமல் சாவார்கள். (லேவி 20:20) அப்படியானால் இப்படிப்பட்ட காரியத்தின் நிமித்தம் சந்தானமற்றிருப்பர்கள் தேவனுடைய சபை பக்திவிருத்திகேதுவான எந்தவிதமான ஊழியமும் செய்ய முடியாது. ஊழியத்தின் பாதையில் சந்தானமற்றவர்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். ஊழியக்காரன் பிள்ளைகளை உடைய குடும்பஸ்தனாக இருக்க வேண்டும். (1 தீமோ 3:4,5)

21. மலடு ஜனங்களுக்குள்ளே உண்டாயிருக்கும் ஒரு நிந்தை (லூக் 1:24) அவள் ஒரு நிந்தையை சுமந்து கொண்டு திரிகிறவளாக இருக்கிறாள். அவள் ஜனங்களால் வெறுக்கப்பட்டவளாக காணப்படுகிறாள். அவள் சமுதாயத்தில் மதிப்பும் மரியாதையும் அற்றவளாக காணப்படுகிறாள். அவளை நாடுவாரும் இல்லை. தேடுவாரும் இல்லை. அவள் புறக்கணிக்கப்பட்டவளாக காணப்படுகிறாள். அவ்வாறு அவளை தள்ளுவது தவறு. வேதவாக்கியம் மேலும் இவ்வாறாக கூறுகிறது. பொல்லாப்பு கொண்டிருக்கிறவர்களுக்கு தேவன் விழுந்து போகிற கர்ப்பத்தையும், பாலற்ற முலைகளையும் கொடுக்கிறார் (ஓசி. 9:14). ஆதலால் பாதிக்கப்பட்டவர்கள் தேவசமூகத்தை இரக்கத்திற்காக தேடுவது நல்லது. அது ஒன்றே வழி. அதிலே நடவுங்கள். உங்கள் பொல்லாத எண்ணங்களிலிருந்து, பொல்லாத சிந்தனைகளிலிருந்து, மாய்மால வாழ்க்கைகயிலிருந்து மனந்திரும்பி, உங்கள் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியைப் பெற்று, ஒரு புது சிருஷ்டியாக கிறிஸ்துவுக்குள் வாழுங்கள். கேளுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும் என்ற வாக்குத்தத்தம் உங்களுக்குரியது. ஆதலால் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்.

22. உன் கர்ப்பத்தின் கனி ஆசீர்வதிக்கப்பட நீ உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படி எல்லாம் செய்ய கவனமாய் இருக்க வேண்டும். அவர் சத்தத்திற்கு உண்மையாய் செவிகொடுக்க வேண்டும். அப்பொழுது அவர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார். (உபா. 28:1,4) கிறிஸ்துவினுடையவர்கள் ஆபிரகாமின் சந்ததி (கலா. 3:29) கிறிஸ்துவினுடையவர்கள் யார்? அவர்கள் கிறிஸ்துவை தரித்துக் கொண்டவர்கள். அப்படியானால் கிறிஸ்துவை தரித்துக் கொண்டவர்கள் யார்? அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள். (அப்.2:38, கலா.3:27) தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் என்ன? வானத்தின் நட்சத்திரங்களைப் போல் உன் சந்ததியைப் பெருகப்பண்ணுவேன் (ஆதி15:5) ஆதலால் ஆபிரகாமின் சந்ததியில், கிறிஸ்துவுக்குள்ளானவர்களிடத்தில் கர்ப்பம் விழுதலும், மலடும் இருப்பதில்லை. (யாத் 23:26) ஒருகாலும் இருப்பதில்லை.

23. ஆனாலும், இதோ மலடிகள் பாக்கியவதிகள் என்றும், பிள்ளைப்பெறாத கர்ப்பங்களும், பால்கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகள் என்று சொல்லப்படும் நாட்கள் வரும். (லூக் 23:29) பிரியமானவர்களே, நாம் அப்படிப்பட்டதான காலத்தில்தான் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். இந்நாட்களில் குழந்தைப் பிரசவத்தை முடிவுக்குக் கொண்டு வருகிறார்கள். இதனால் தாய்மை முடிவுக்கு வருகிறது. கருத்தடை எல்லா இடங்களிலும் பிரசங்கிக்கப்படுகிறது. அது பின்பற்றப்பட்டு வருகிறது. சிறு மழலைச் செல்வங்களின் இடத்தை நாய்குட்டிகள் எடுத்துக் கொண்டன. குழந்தை விளையாட வேண்டிய தாயின் மடியில் நாய் படுத்து உறங்குகிறது, விளையாடுகிறது. நாயை இடுப்பில் துக்கி வைத்துக் கொள்கிறார்கள். கால்களில் வைத்து தாலாட்டுகிறார்கள். முத்தம் கொடுக்கிறார்கள். கொஞ்சுகிறார்கள். இவ்வாறான முறைகேடுகளை என் கண்களினால் பார்த்து இருக்கிறேன். இவைகளைச் செய்கிறவர்கள் யார்? சர்ப்பத்தின் வித்துக்களே. தாய்மை படுகுழியில் நாளுக்குநாள் மூழ்கி கொண்டு வருகிறது. ஒரு இடத்திலும் ஒழுக்கம் இல்லை. பெண்களுக்குப் பிள்ளை பெற விரும்பம் இல்லை. தாய்மை ஸ்தானத்தில் இருக்க மனமில்லை. காரணம் என்ன? தேவவசனம் துஷிக்கப்படும்படியாக பெண்கள் பொதுஸ்தலங்களுக்கு சென்று பணிபுரிய ஆரம்பித்து விட்டதே. நல்ல வருமானம். வீட்டில் சமைக்க நேரமில்லை. ஹோட்டலில் இருந்து சாப்பாடு வருகிறது. வேலை முடித்து வருகிறார்கள், மிக்க களைப்பு. களைப்பின் மிகுதியால் நித்திரை. இதன் மத்தியில் கணவன் மனைவி தாம்பத்திய உறவு இருந்தாலும், பிள்ளைப்பிறப்பை கட்டுபடுத்திக் கொள்கிறார்கள். அவர்களுக்குப் பிள்ளைப் பெற்று அதை வளர்க்க மனம் இல்லை. ஏதோ மலடி என்று அழைக்கப்படாமல் இருக்க ஒன்றே ஒன்று போதும் என்று நினைக்கிறார்கள். அதையும் தாத்தாவும், பாட்டியும், வேலைக்காரியுமாக சேர்ந்து வளர்க்கிறார்கள். இதெல்லாம் என்ன? தேவனுடைய நோக்கத்தை சீர்குலைத்தல். இந்த மனப்பான்மை பிசாசினுடையதே. தேவனுக்கும் இவர்களது இல்லற வாழ்க்கைக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை இப்படிப்பட்டவர்களுடைய இல்லற வாழ்க்கை ஒருக்காலும் பிரதிபலிக்காது.

24. சில காலம் நான் சென்னையில், பூவிருந்தவல்லி, திருமால் நகரில் வசிக்கும் ஒரு டெப்புட்டி கலெக்டர் வீட்டில் வாடகைக்கு இருந்தேன். இவரது மனைவி ஒரு ஆசிரியை. இவர்கள் R.C கிறிஸ்தவர்கள். இவர்களுக்கு இரண்டு பெண்கள். மூத்தவள் டாக்டராகவும், இளையவள் பொறியாளராகவும் படித்து கொண்டு இருக்கிறார்கள். ஆண் பிள்ளை இவர்களுக்கு கிடையாது. ஆதலால் இவர்கள் வீட்டில் ஒரு ஆண் நாயை வளர்க்கிறார்கள். டெப்புட்டி கலெக்டர் இந்த நாயை மை சன் - (My son) என்றே அழைப்பார். மூத்த பெண் பிள்ளை அந்த நாயை தம்பி என்றே அழைப்பாள். அந்த அளவுக்கு அந்த நாய் மேல் அவர்களுக்கு பாசம். அந்த அம்மா வேலையிலிருந்து வீடு வரும்போது அந்த நாய் அவர்களை தொத்திக்கொண்டு விடாது பற்றிக் கொள்ளும். மூத்த பெண் பிள்ளை கல்லூரியிலிருந்து வீடு வரும்போது அந்த நாயைத் தூக்கி தன் மார்போடு அணைத்துக் கொள்வாள். அந்த நாயின் முன் கால்கள் இரண்டையும் கொண்டு தன் கழுத்தோடு கோர்த்துக் கொள்வாள். பின் கால்கள் இரண்டையும் கொண்டு தன் இடுப்பை சுற்றிக் கொண்டு நாயை மார்போடு அணைத்துக் கொள்வாள். தன் இடுப்பில் அந்த நாயை சுமப்பாள். இப்படியாக அவர்கள் அந்த நாய் மீது அன்பு

பாராட்டுவார்கள். அதாவது ஒரு ஆண் பிள்ளை மீது செலுத்த வேண்டிய அன்பை அந்த நாய் மீது செலுத்துகிறார்கள். இன்னும் சொல்லப்போனால் அந்த நாய் வீட்டில் உள்ள அம்மா, மற்றும் அந்த மூத்த பெண் இருவர் மடியிலும் படுத்துக் கொள்ளும். அவர்கள் அதை தட்டிக் கொடுத்து தங்கள் பாசத்தை வெளிப்படுத்துவார்கள். இந்த காட்சிகளை பார்க்க எங்களுக்கு மிக்க அருவருப்பாக இருக்கும். ஆனால் அவர்களோ ஒரு ஆண்பிள்ளை மீது காட்டவேண்டிய பாசத்தை ஒரு நாய்மீது காட்டுகிறார்கள். அந்த அளவுக்கு மனுகுலம் சீர்குலைந்து காணப்படுகிறது. காரணம் என்ன? நாகரீகம். இப்படிப்பட்ட மனுகுல சீரழிவை நாம் இந்த குடும்பத்தில் மட்டுமல்ல அநேக குடும்பங்களில் காண்கிறோம். நாய்களை வளர்த்து அதன் மீது பிள்ளை பாசத்தை காட்டுகிறார்கள். பெண்கள் கருத்தடை செய்து கொள்கிறார்கள். நாம் இருவர் நமக்கு இருவர் என்கிறார்கள். அதன் விளைவு என்ன? நாய் மீது பிள்ளை பாசம். தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக் கொடுத்துள்ளார். தகாதவைகளை செய்யும்படி தேவன் அவர்களை கேடான சிந்தனையாகிய கர்ப்பத்தடை, கருச்சிதைவு போன்ற அவலட்சனமானதை நடப்பிக்க ஒப்புக் கொடுத்துள்ளார். இவர்கள் கிறிஸ்தவர்களே அல்ல. கிறிஸ்துவுக்கும் இந்த ஜனங்களுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை. ஏனென்றால் தேவனுடைய நாமம் இவர்களால் அனுதினமும் தூஷிக்கப்படுகிறதே. முடிவாக இந்த வீட்டார் அந்த நாயின் அநுதின அசுத்தங்களை துப்புரவு செய்ய எங்களைக் கேட்டுக் கொண்டார்கள். நாங்கள் மறுத்தோம். அதன் விளைவாக வீட்டையும் காலி செய்தோம்.

25. தேவனுடைய பிள்ளைகள் பலுகிப் பெருக ஆசீர்வதிக்கப்பட்டவர்களேயன்றி மற்றபடி அல்ல. ஆனால் இக்காலத்து நூதன விசுவாசப் பெண்கள் தங்கள் கர்ப்பத்தை தடை செய்கிறார்கள். நாம் இருவர், நமக்கு இருவர் போதும் என்கிறார்கள். ஆனால் ஐசுவரியத்தின் மேல் நாட்டம் உள்ளவர்களாய் கர்த்தாவே என் வீட்டில் பலகனிகளைத் திறந்து வைக்கிறேன். என் வீடு கொள்ளாமட்டும் என்னை ஐசுவரியத்தினால் நிரப்பும். கர்ப்பத்தடை போன்று அதில் தடை எதுவும் வேண்டாம் என்கிறார்கள். ஆனால் பிரியமானவர்களே தடை செய்யப்பட்ட கர்ப்பம் தேவனுடைய பார்வையில் சபிக்கப்பட்ட கர்ப்பம். படித்துப் பட்டம் பெற்ற பெண் ஓரிரு குழந்தைகளுடன் நிறுத்திக் கொள்கிறாள். ஆனால் படிக்காத அவள் சகோதரி பல குழந்தைகளைப் பெறுகிறாள். கல்வி அறிவு சாத்தானுடையதாகும். ஆதலால் அவன் எப்பொழுதுமே தேவநியமத்துக்கு எதிராக செயல்படுகிறவனாய் இருக்கிறான். தேவன் ஆசீர்வதிப்பதை தடை செய்ய முயற்சிப்பதே அவனுடைய பிரதான செயல்.

26. இஸ்ரவேலின் குமாரத்திகளில் ஒருத்தியும் வேசியாய் இருக்கக்கூடாது: இஸ்ரவேலின் குமாரரில் ஒருவனும் ஆண்புணர்ச்சிக்காரனாக இருக்கக் கூடாது. வேசிப்பணயத்தையும், நாயின் கிரயத்தையும் எந்தப் பொருத்தனையிலாகிலும் உன் தேவனாக கர்த்தரின் ஆலயத்திலே கொண்டுவராயாக. அவைகள் இரண்டும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவைகள். (உபா.23:17,18) நாய் தேவனுக்கு அருவருப்பானது. அப்படி இருந்தும் அவர்கள் செய்வதைப் பாருங்கள். குழந்தை பெறாதபடிக்கு குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டு அதே சமயத்தில் ஒரு நாயை வாங்க பல ஆயிரங்கள் செலவு செய்து குழந்தையிடம் காட்ட வேண்டிய அன்பையும், பாசத்தையும் அந்த நாய் மீது காட்டி மனுகுலத்திற்கு அழிவைக் கொண்டு வருகிறார்கள். அழிவைத் தவிர வேறு எதற்காக இந்த உலகம் காத்துக் கொண்டிருக்கிறது? இது கர்ப்பத்தடை செய்கிற அழிவு காலம். நாயை வளர்த்து அதன் மீது பிள்ளைப் பாசம் காட்டுகிற அழிவு காலம். மனுக்குலம் சீரழிந்து கொண்டுவருகிற காலம்.

27. தாயின் வயிற்றில் கரு உருவாகினபின்பு அந்த கருவை கலைத்தல், கர்ப்பத்திலே ஒரு உயிரை கொலை செய்வதாகும். (ஏசா.20:17) அவள் மனுஷ கொலைப்பாதகி. அவள் தாயே அல்ல. தாய்மை மற்றும் தாய் அன்பு அவளிடத்தில் இல்லை. அவளுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திருக்காது.(1யோ3:17) ஒரு ஸ்திரீ தன் குழந்தையை சாகடிக்கிறாள். தேவன் அதை பார்க்க வில்லை என்று நினைக்கிறாள். நியாத்தீர்ப்பின் நாளில் நிச்சயமாக அவள் அதற்கு பதிலளிக்கவேண்டியவளாக இருக்கிறாள். கொலை பாதகர்கள் எல்லாம் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலில் பங்கடைவார்கள்.( வெளி 21:8). உன் வயிற்றில் பல கொலைகளை செய்து, உன்னை மணவாட்டி என அழைத்துக் கொள்ளும் ஸ்தீரியே நீ நியாயத்தீர்ப்பில் நிற்க வேண்டும். உன் கருவில் வளர்ந்துவரும் சிசுவுக்கு ஜீவன் உண்டு. நீ உன் கருவில் வளர்ந்து வரும் சிசுவை கொலைசெய்வது ஒரு குழந்தையை கொலை செய்வதற்கே ஒப்பாகும். ஒரு ஜீவனை அழிப்பது கொலைப்பாதகம் அல்லாது வேறு என்ன? நீ பிசாசின் ஆலோசனைக்கு செவிக்கொடுத்து இதை செய்தாய். நீ உன் சுயபுத்தியைச் சார்ந்து இதைச் செய்தாய்.

28. கருத்தரித்த கர்ப்பத்தை கலைப்பது கொலை பாதகமாகும். இது கர்ப்பத்திலே ஒரு கொலை (எரே 20:17) கருச்சிதைவு-பிறக்க இருக்கும் குழந்தையை அழிப்பதாகும். அதாவது உயிர் கொலை. ஜீவனைக் கொடுப்பதும், எடுப்பதும் தேவனுடைய செயலே. கருச்சிதைவினால் கள்ள உறவு பெருகிறது. அதன் விளைவினால் விபச்சாரம், வேசித்தனம் பெருகிறது. சாத்தான் அதைத்தானே மக்களிடம் இருந்து விரும்புகிறான். கள்ள உறவுக் கொண்ட பின் யாருக்கும் தெரியாமல் டாக்டர்களிடம் சென்று கருவை கலைத்து விடுதல் இந்நாட்களில் பெருகி வருகிறது. மக்கள் தங்கள் வாழ்க்கையை சின்னாப்பின்னமாக்கிக் கொண்டு வருகிறார்கள். குழந்தைகள் பிறப்பதை தடுக்க குடும்பக்கட்டுப்பாடு செய்வது குற்றம். பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். னுத்தனை பேர் தங்களுக்கு குழந்தைகள் இல்லையே என்று ஏங்குகிறார்கள்? இருபதாம் நூற்றாண்டு தீர்க்கதரிசியும் கூட தான் கர்ப்பத்தடையை அங்கீகரிப்பது இல்லை என்றும் இக்காலத்தில் குழந்தைப் பிறப்பு ஒரு முடிவுக்கு வருகிறது. அந்த அளவுக்கு ஜனங்கள் மத்தியில் நல் நடத்தை கெட்டு போய்விட்டது எனவும் புலம்புகிறார். இவரது கருத்தை நீங்கள் இவரது கேள்விப்பதில் 421ல் வாசிக்கலாம். கேள்வி: நீங்கள் குடும்பக்கட்டுப்பாட்டை ஆமோதிக்கிறீர்களா? பதில் : இல்லை □என்னால் அதை ஆமோதிக்க முடியாது. இல்லை. பிரியமானவர்களே பிள்ளைப் பேறு ஒரு ஸ்திரீக்கு மரணத்தைக் கொண்டு வரும் என்பதான பிரச்சனையாய் இருந்தால் மட்டுமே ஒரு ஸ்திரீ கர்ப்பத்தடை செய்து கொள்ளலாம். ஆனாலும் அவள் நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிவேன். தேவனால் கூடாத காரியம் ஒன்றும் இல்லை. நான் கர்ப்பத்தடை செய்ய மாட்டேன். அது தேவனுடைய நீதிக்கு மாறானது என்ற விசுவாசத்தில், நம்பிக்கையுடன் நிலைத்திருப்பாளானால் பிள்ளைப் பேறு விஷயத்தில் மரணம் ஒருபோதும் அவளை மேற்கொள்ள முடியாது. விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். அது தான் காரியம்.

29. இதோ மலடிகள் பாக்கியவதிகள் என்றும், பிள்ளை பெறாத கர்ப்பங்களும், பால் கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்றும் சொல்லப்படும் நாட்கள் வரும். (லூக் 28:9) ஆம் நாம் அப்படிப்பட்ட நாட்களில் தான் இருக்கிறோம். பிள்ளைப் பேற்றினால் சரீரக்கட்டின் கவர்ச்சி விகாரப்படும். குழந்தைக்கு பால் கொடுப்பதினால் மார்பின் அமைப்பு சீர்குலைந்து விடும், இதனால் வேலைக்கு நீங்கள் வெளியே செல்லும்போது கவர்ச்சியான உடல் கட்டுடன் செல்லமுடியாது. ஆதலால் உங்களுக்கு பிள்ளைப் பேறே வேண்டாம் என்று சாத்தான் நல்ல பாடம் நமது பெண்களுக்கு

கற்பித்து உள்ளான். அதற்காக அவன் தனது விஞ்ஞானிகளைக் கொண்டு மருந்து மாத்திரைகளையும் ஏராளம் உற்பத்தி செய்து வைத்துள்ளான். ஆம், இக்காலத்தில் பெண்கள் இந்த மருந்த மாத்திரைகளை சாப்பிட்டு பிள்ளைப் பேறை அலட்சியப்படுத்துகிறார்கள். ஆனாலும் சரீர இச்சை பூர்த்தி செய்யப்படுகிறது. பிள்ளைப்பேறு தவிர்க்கப்படுகிறது. இப்படிப்பட்ட பெண்கள் கிறிஸ்துவ பெண்களாக இருக்க முடியுமா என்றால், முடியாது என்பது தான் பதில். இவ்வாறாக நடந்து கொள்பவள் பேலியாளின் மகளே அன்றி சர்வ வல்லமையுள்ள தேவனுடைய குமாரத்தி அல்ல. ஆம் ஸ்தீரிகள் தங்களுக்கு பிள்ளைகளே வேண்டாம் என்கிறதான கொடிதான நாட்களில் நாம் இருக்கிறோம். கர்ப்பத்தடை செய்யும் பெண்ணை ஆதரிக்கும் சாத்தானின் ஏதேனில் நாம் இருக்கிறோம். கர்ப்பத்தடை செய்பவள் தான் புத்தியுள்ள பெண் என புகழ் பாடும் காலம் இது. இது கடைசி நாட்களில் நடக்கும் சம்பவங்களில் ஒன்று. ஆதலால் நாம் கடைசி நாட்களில் இருக்கிறோம். என்பதை அறிந்து கொள்ளலாம். " நாம் இருவர் நமக்கு இருவர்" கர்ப்பத்தடை, கருச்சிதைவு தேவனுடைய பிரமாணத்தை சீர்குலைக்கும் பாதகச் செயல் ஆகும்.

30. சமீப நாட்களில் இரு குடும்பங்களை நான் சந்திக்க நேர்ந்தது. ஒரு குடும்பத்தில் ஒரு ஆண், ஒரு பெண். இரு குழந்தைகள் போதும் என நிறுத்திக் கொண்டு கர்ப்பத்தடை செய்து கொண்டார்கள். ஆனால் ஒரிரு ஆண்டுகளில் அந்த ஆண் குழந்தை இறந்துவிடவே, பின் அந்த இடத்தில் எப்படியும் ஒரு ஆண்குழந்தை வேண்டும் என்ற ஆர்வம் மனதில் நிரந்தரமான ஒரு இடத்தை பிடித்துக் கொள்ள, மற்றொரு குடும்பத்தில் பிறந்த ஆண் குழந்தையை, பிறந்தவுடனே கொண்டு வந்து வளர்க்கிறார்கள். அடுத்த குடும்பத்தில் முதலில் ஆண் குழந்தை பிறந்தது. உடனே கர்ப்பத்தடை செய்து கொண்டார்கள். இப்பொழுது ஒரு பெண் குழந்தைக்காக ஏங்குகிறார்கள். ஒரு பெண் குழந்தையை தத்தெடுத்து வளர்க்க விரும்பிகிறார்கள். இது எல்லாம் என்ன? தேவனடைய நாமத்தை தூஷிப்பதாகும். தேவநீதிக்கு விரோதமாக செயல்படுவதாகும். ஆனாலும் தங்கள் செயல்பாடுகளை மெச்சிக் கொள்கிறார்கள்.

31. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயும் வாக்குத்தத்தின்படி சுதந்தராயும் இருக்கிறீர்கள் கலா: 3:29. இந்த சந்ததியில் மலட்டுத்தன்மை காணப்படாது. ஏனென்றால் கர்த்தர் உன் மேல் அன்பு வைத்து உன் கர்ப்பத்தின் கனியை ஆசீர்வதித்து உன்னைப் பெருக்க பண்ணுகிறார். (உபா. 7:13). சகல ஜனங்களைப் பார்க்கிலும் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய். உங்களுக்குள்ளும், உங்கள் மிருக ஜீவன்களுக்குள்ளும் ஆணிலாகிலும், பெண்ணிலாகிலும் மலடிருப்பதில்லை. (உபா 7:14) கர்ப்பம் விழுகிறதும் மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை. (யாத் 23:26). ஆக கிறிஸ்துவினுடையவர்களிடம் ஒருக்காலும் மலட்டுத் தன்மை காணப்படாது. கர்ப்பம் விழுதல் இருக்காது.

32. தேவன் உங்கள் மனைவியின் கர்ப்பத்தை அடைத்திருந்தால் (ஆதி. 30:2) அது நிமித்தம் உங்கள் மனைவி மலடியாய் இருந்தால் கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்யுங்கள். நீ கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் உன் முழு பலத்தோடும் அன்பு கூர்ந்து தேவனுக்குப் பயந்து அவருடைய கட்டளைகளையும் கற்பனைகளையும் கைக்கொள். அப்பொழுது அவர் உன் மீது இரங்குவார். (ஆதி 25:21, 30:22) மலட்டுத்தன்மையிலே கணவன் மனைவியை மரணம் பிரிக்குமானால் அவர்கள் தெரிந்து கொள்ளுதல் சரியல்ல. அவர்கள் ஆபிரகாமின் சந்ததியும் அல்ல. வாக்குத் தத்தத்தின்படி சுதந்தரரும் அல்ல.

33. விதையடிக்கப்பட்டவனும், கோசம் அறுபட்டவனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. (உபா 23:1) பெண்களைப் போன்று ஆண்களும், குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளும் செயல் மிகக் கொடூரமான ஒரு செயலாகும். இவர்கள் தங்கள் ஆண்மையின் வீரியத்தைக் கட்டுப்படுத்த ஆபரேஷன் செய்து கொள்ளுகிறார்கள். இதனால் இவர்களால் பெண் கருதரிக்க முடியாது. இப்படியாக விதையடிக்கப்பட்டவன் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. இவன் அப்பிரயோஜன மற்ற மனிதன் குப்பைத் தொட்டியிலே எறியப்பட வேண்டியவன்.

34. பிரியமானவர்களே, தேவனுடைய பிள்ளைகள் மத்தியில் கர்ப்பம் விழுதல் இருக்காது. மலட்டுத்தன்மை இருக்காது. மேலும் அவர்கள் குடும்பக்கட்டுப்பாடு செய்யக்கூடாது, கருத்தரித்த கர்ப்பத்தை கலைக்கக் கூடாது, அது கொலைப்பாதகம் என சுறுக்கமாக வேத வாக்கியங்களை கொண்டு ஒரு சிறு செய்திக் தொகுப்பு எழுதியுள்ளேன். இது உங்கள் ஆத்துமாவுக்கு பிரயோஜனமாய் இருக்கும் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். குடும்பகட்டுப்பாடு என்ற வார்த்தை தேவனுடைய வார்த்தையில் வேதவாக்கியங்களில் எங்கும் கிடையாது. அது தேவனால் அனுமதிக்கப்பட்டதும் கிடையாது. தேவன் பலுகிப் பெருகுங்கள் என்று கூற, நீ நான் அதை செய்ய மாட்டேன், ஆனால் அதைக் கட்டுப்படுத்துவேன் என்று கூறுகிறாய். நீர் என்ன சொல்ல, நான் என்ன செய்ய என்று கூறி கர்ப்பத்தடை செய்கிறாய். ஆனாலும் உன்னை அவருடைய மணவாட்டி எனவும் கூறிக்கொள்கிறாய். நிச்சயமாக கர்ப்பத்தடை செய்தவளுக்கும் கிறிஸ்துவுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. நிச்சயமாக இல்லை ஐய்யா! ஆனாலும் இது பிள்ளைப் பெறாதவள் பாக்கியவதி என்றும் பால் கொடுக்காத முலை பாக்கியமுள்ளது என்றும் பிரசங்கிக்கப்படும், கடைபிடிக்கப்படும் காலமாக, சாத்தானின் ஏதேனாக இருக்கிறது. இந்த சந்ததியைவிட்டு, சாத்தானின் ஏதேனைவிட்டு வெளியே வாருங்கள். கர்த்தருடைய வருகைக்காக காத்துக் கொண்டிருக்கிற நீங்கள் கறையற்றவர்களும், பிழையற்றவர்களுமாய் சமாதனத்தோடே அவர் சந்ததியில் காணப்படும்படி ஜாக்கிரதையாய் இருங்கள்.

35. கலா4:27ல் இவ்விதமான கூறப்பட்டிருக்கிறது. அதாவது, அந்தப்படி பிள்ளைபெறாத மலடியே மகிழ்ந்திரு: கர்ப்ப வேதனைப்படாதவளே களிப்பில் எழும்பி ஆர்ப்பரி. புருஷன் உள்ளவளைப் பார்க்கிலும் அநாத ஸ்திரீக்கே அதிக பிள்ளைகள் உண்டு என்று எழுதியிருக்கிறது. மேலும் இந்த வசனத்தை ஏசா 54:1ல் வாசிக்கலாம். இதன் கருத்து என்ன? புருஷன் உள்ளவள் யார்? கிறிஸ்துவை தரித்துக் கொண்டவள். இவள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியைப் பெற்று, கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கிறாள். அப்படியானால் அந்த அநாத ஸ்திரீ யார்? சபை ஸ்தாபன மக்கள் கிறிஸ்துவை தரித்திருக்கிறோம் என கூறிக்கொண்டு இவர்கள் கிறிஸ்துவை தரித்துக் கொள்ளாதவர்களாய் இருக்கிறார்கள். புருஷன் உள்ளவர்களைப் பார்க்கிலும், (அப் 2:38 ன் படி கிறிஸ்துவை தரித்துக் கொண்டவர்களைப் பார்க்கிலும்) அநாத ஸ்திரீக்கு (ஸ்தாபன சபைகளுக்கு / கிறிஸ்துவை தரித்துக் கொள்ளாதவர்களுக்கு) பிள்ளைகள் அதிகம். இது எப்படி? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் மிக மிக குறைவு. பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அதாவது ஸ்தாபன சபைகளை சேர்ந்தவர்கள் மிக மிகஅதிகம். மலடுகள், கர்ப்பம் விழுதல், கருத்தடை எல்லாம் ஸ்தாபன சபை மக்களின் மத்தியில் தான் அதிகம். பிள்ளை பெறாவிட்டால் அவர்களுக்கு மகிழ்ச்சி தானே. கர்ப்ப வேதனைப்படாதவர்கள் களிப்பினால் எழும்பி ஆர்ப்பரிக்கின்றார்களே.

36. இதோ, மலடிகள் பாக்கியவதிகளென்றும், பிள்ளைபெறாத கர்ப்பங்களும், பால் கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகள் என்றும் சொல்லப்படும் நாட்கள் வரும். (லூக் 23:29) அன்று இயேசு எருசலேமின் குமாரத்திகளை நோக்கி கூறிய இந்த வேதவாக்கியம் நிறைவேறிக்கொண்டிருப்பதை காணும் கண்கள் பாக்கியமுள்ளவைகள்.

37. கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உங்கள் அனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக. ஆமென்.

கிறிஸ்துவின் அன்பில்

ஜுன் 2008,

**சகோ. காலேப் யோசுவா.**

# உங்கள் கரங்களில் அவ்வப்பொழுது வந்து தவழும் "இயேசுவே வாரும்" செய்தித்தொகுப்பு யாருக்கு?

16th May, 2008

THE MOUTH OF THE RIGHTEOUS BRINGS FORTH WISDOM- PROVERB: 10-31

My Dear Brother,
I am Matthew Roy from Delhi. I am a end time message believer since 1993. Basically I am from Ooty settled in Delhi. I know you very well but you may not know me. I am a regular reader of your news magazine called " Yesuve Vaarum". I am not reciving the ariticle but one of my co-brother KMS Jahangir receives your magazine regularly.

I am really blessed by your articles, many times it gives good pleasure in Christ when read through the articles. Many things opened our eyes to see the things which never saw before. Recently I had gone through your article regarding Marriage Toekn. I really had a question in mind but it was very clearly explained. Life Insurance article is excellent. Really I blessed. I agree witht you He is of Assurance and Insurance and Everything. May God Bless You. Bro. Roy Matthew, New Delhi.

3/ 8

அன்புள்ள சகோதரர் Bro. காலேப் ஐயா அவர்களுக்கு தங்களின் தாலி பற்றிய மற்றும் இன்சூரன்ஸ் பற்றி தொகுப்பு கிடைக்கப்பெற்றேன். மிகவும் நல்ல கருத்துக்களை வேதபூர்வமாக சொல்லியிருந்தீர்கள். நன்றி! நான் பிரஹாம், திம்மராஜபுரம்.. . தாங்கள் ஒரு செட் தாலி மற்றும் L.I.C பற்றிய தொகுப்பு அனுப்பித் தரவும் .என் வச தியை ஒரு சகோதரர் வெளியூர் கொண்டு சென்றுவிட்டார். மற்றொரு Set of Tracts அனுப்பித் தரவும். நன்றி!
M. தாமஸ் பில்லிகிரஹாம். (நெல்லை)

கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைவதற்காக நான் அவ்வப்போது ஆவியானவரின் வழிநடத்துதலின்படி ஒரு பொருளை தெரிந்துக் கொள்கிறேன். பின் அதற்காக முதலில் வேதவாக்கியங்களை, இரண்டாவது இக்காலத்திற்குரிய செய்தியை, தேவைப்பட்டால் மூன்றாவது சிலர் எழுதிய புத்தகங்களை தியானிக்கின்றேன். பின் தியானித்தவைகளோடு என் மனதை ஒருமனப்படுத்தி செய்தித் தொகுப்பை எழுத ஆரம்பிக்கிறேன். முதலில் எழுதியதை தியானிக்கின்றேன். ஆங்காங்கு திருத்தங்கள் தேவைப்படுமாகில் அதை செய்து மீண்டும் செய்தியை இரண்டாவது முறையாக எழுதுகிறேன். சில வேளைகளில் மூன்றாவது முறை எழுதவும் நேரிடும். ஆகசெய்தியை முடித்து, பின் அதை D.T.P சென்டருக்கு எடுத்துச் செல்கிறேன். அவர்களுக்கு சமயம் கிடைக்கும் போது நான் எழுதியவைகளை வாயினால் படிக்க, அவர்கள் அதை டைப் பண்ணுகிறார்கள். டைப் முடிந்தவுடன் ரப் காப்பி எடுத்துக் கொடுக்கிறார்கள். அதில் திருத்தங்கள் செய்கிறேன். பொதுவாக இருமுறை திருத்தங்கள் செய்ய நேரிடும். திருத்தங்கள் முடிந்தவுடன் ஒரிஜினல் காப்பி எடுக்கிறேன். அவர்களுக்கு கொடுக்க வேண்டிய தொகையை செலுத்துகிறேன். பின் அதை பிரிண்ட்க்காக எடுத்துச் செல்லுகிறேன். அவர்கள் பேப்பர் செலவுத் தொகையை முதலில் அட்வான்ஸாக கேட்பார்கள். அதை கொடுத்து பிரிண்டிங் ஆரம்பிக்க சொல்கிறேன். பிரிண்டிங் முடிந்தவுடன் மீதி தொகையை செலுத்தி டெலிவரி எடுக்கிறேன். சில வேலைகளில் பணத்தட்டுப்பாடால் பிரிண்டிங் ஆகியும் டெலிவரி எடுக்கமுடியாமல் கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்படும். கூடியமட்டும் எங்கும் கடன் வைப்பதில்லை. பிரிண்டிங்ஆன செய்தி தொகுப்பை வீட்டிற்கு எடுத்து வருகிறேன்.1000 செய்தி தொகுப்புக்களை ஒவ்வொன்றாக பேக் செய்கிறேன். பின் விலாசம் எழுதி ஸ்டாம்ப் ஒட்டுகிறேன். சில வேளைகளில் ஸ்டாம்ப் வாங்கவும் பணத்தட்டுப்பாடு ஏற்படும். ஸ்டாம்ப் ஒட்டியபின் போஸ்ட் ஆபீஸ் எடுத்துச்சென்று 2/3 முறையாக போஸ்ட் செய்கிறேன். இவைகள் கன்னியாகுமரி முதல் டெல்லி வரை பரவலாக பல இடங்களுக்குச் செல்கிறது. இவ்வாறாக அவைகள் உங்கள் கரங்களில் வந்து தவழ்கிறது. **இத்தனை பணிகள் அனைத்தையும் நான் ஒருவனாகவே கர்த்தர் கொடுத்த பெலத்தினால் செய்கிறேன் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். இதன் மத்தியில் குடும்ப பிரச்சனைகள் ஆயிரம். நான் ஒரு நிர்பந்தமான மனுஷன்.**

இது முற்றிலுமாக கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக, புத்தியுள்ள கற்புள்ள கன்னிகைகளுக்காக எழுதப்பட்டு வருகிறது. ஆதலால் இது மற்றவர்களுக்கு எந்த வகையிலும் பிரயோஜனமாக இருக்காது. ஆனாலும் இது புத்தியில்லாத கன்னிகைகள், அவிசுவாசிகள், மற்றும் பாவனை விசுவாசிகளின் கரங்களில் அவர்களுக்கு எதிரான சாட்சியாக நியாத்தீர்ப்பு நாளில் காணப்பட சென்றடைகிறது. எனது இரு குமாரர்கள் கர்த்தருக்குரிய தசமபாகத்தை என்னிடம் கொடுக்கிறார்கள். நான் அதை என் ஊழியத்தில் பிரயோஜனப்படுத்துகிறேன். ஆனாலும் இது எனக்கு பற்றாக்குறையாக இருக்கிறது. ஆதலால் இது எனது குடும்ப செலவுகளில் ஒன்றாக கலந்து விட்டது. சில சமயங்களில் நம்முடைய சகோதரர்களில் ஒரிருவர் உதவி செய்வதும் உண்டு. அவர்களுக்கு நான் நன்றி உள்ளவனாய் இருக்கிறேன்.

**சகோ. காலேப் யோசுவா**